பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 01 2025 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. 2036 ஒலிம்பிக் போட்டியை இந்தியாவில் நடத்த தேவையான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. இந்திய விண்வெளி ஆய்வு மையம் இஸ்ரோ 100 ராக்கெட்களை விண்ணில் செலுத்தி புதிய சாதனை படைத்திருப்பதாக அதன் தலைவர் திரு நாராயணன் கூறியுள்ளார்.
3. வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தலைவர் திரு முகமது பின் சையத் அல் நஹியானை சந்தித்து பேசினார்.
4. பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவில் மவுனி அமாவாசை தினத்தையொட்டி இன்று லட்சக்கணக்கானோர் புனித நீராடி வருகின்றனர்.
5. ஹாக்கி இந்தியா லீக் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் கொணாசிகா அணி – ஹைதராபாத் அணியை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

2036 ஒலிம்பிக் போட்டியை இந்தியாவில் நடத்த தேவையான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில் தேசிய விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்து பேசிய அவர், ஒலிம்பிக் போட்டிகளை நம் நாட்டில் நடத்துவது இந்திய விளையாட்டுத்துறையை புதிய உச்சத்திற்கு அழைத்துச் செல்லும் என்றார்.

இந்தியா முழுவதும் உள்ள விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான உபகரணங்களை உற்பத்தி செய்து வருவதாகக் கூறிய அவர், உத்திரபிரதேச மாநிலம் மீரட்டில் விளையாட்டு உபகரணங்களை தயாரிக்கும் தொழிற்சாலைகள் பெருமளவில் இயங்கி வருவதாகக் குறிப்பிட்டார்.

விளையாட்டுத்துறையை ஊக்குவிக்க மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் இந்திய அணி உலகக்கோப்பை கோ-கோ போட்டியில் தங்கப்பதக்கம் வென்றதுடன், குகேஷ் உலக செஸ் சாம்பியன் பட்டத்தை வென்றதையும் திரு நரேந்திரமோடி சுட்டிக்காட்டினார்.

**[]<<<>>>[]**

இந்திய விண்வெளி ஆய்வுக்கழகம் இஸ்ரோ தனது 100-வது ராக்கெட்டை இன்று காலை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி சாதனை படைத்துள்ளது.

**nvs -02** செயற்கைக்கோள் ஜி எஸ் எல் வி –எப்-15 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதிஷ் தவன் விண்வெளி மையத்திலிருந்து இன்று காலை விண்ணில் செலுத்தப்பட்டது.

இரண்டாயிரத்து 250 கிலோ எடை கொண்ட இந்த செயற்கைக்கோள் பயண வழிகாட்டி நடைமுறைகளில் வெளிநாடுகளை சார்ந்திருப்பதை தவிர்த்து சுயசார்புக்கு வழிவகுக்கும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பாதுகாப்புத்துறையின் செயல்பாடுகளுக்கு இந்த செயற்கைக்கோள் உதவிகரமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்கைக்கோள் இந்திய நிலப்பரப்புக்கு அப்பால் சுமார் ஆயிரத்து 500 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பயனாளர்களுக்கும் தனது சேவையை வழங்கும்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரோ தலைவர் திரு நாராயணன், 100 ராக்கெட்களை செலுத்தி விண்வெளித்துறையில் இந்தியா புதிய சாதனை படைத்திருப்பதாக கூறினார்.

இந்தியா இதுவரை 548 செயற்கைக் கோள்களை செலுத்தி இருப்பதாகக் கூறிய அவர், இஸ்ரோவின் முயற்சிகளுக்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கம் அளித்து வருவதாகத் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தேசிய சுகாதார இயக்கத்திற்கான நிதி ஒதுக்கீடு கடந்த பத்து ஆண்டுகளில் 185 சதவீதம் அதிகரிக்கப்பட்டிருப்பதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

இந்த இயக்கத்தின் சாதனைகள் குறிதது நேற்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பத்து ஆண்டுகளுக்கு முன்பு இத்திட்டத்திற்கு 18 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட நிலையில் தற்போது 33 ஆயிரத்து 433 கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இந்த திட்டத்தை செயல்படுத்தியதன் விளைவாக பிரசவத்தின்போது குழந்தைகள் இறப்பு விகிதம் வெகுவாக குறைந்துள்ளதாகவம் அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் மக்களுக்கு தரமான சிகிச்சை வசதிகள் குறைந்த செலவில் எளிதில் கிடைப்பதாகவும் திரு ஜெ பி நட்டா குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

ஒடிஸாவில் தகவல் தொழில்நுட்ப சேவைகளுக்கென மத்திய மாநில அரசுகள் இணைந்து பொதுவான வசதிகளை ஏற்படுத்த இருப்பதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புவனேஸ்வரில் நடைபெற்று வரும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு இடையே செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒடிஸாவில் முதலீடுகளுக்கு உகந்த சூழல் உருவாக்கப்பட்டுள்ளது என்றார்.

மத்திய அரசின் சார்பில் ரயில்வேத்துறை 73 ஆயிரம் கோடி ரூபாயும், தகவல் தொழில்நுட்ப துறை மூலம் 20 ஆயிரம் கோடி ரூபாயும், தொலைத் தொடர்புத்துறை சார்பில் ஐயாயிரத்து 33 கோடி ரூபாயும் முதலீடு செய்யப்பட இருப்பதாகவும் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

**[]<<<>>>[]**

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தலைவர் திரு முகமது பின் சையத் அல் நஹியானை சந்தித்து பேசினார்.

அபுதாபியில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது இந்தியா – ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையேயான விரிவான நீடித்த ஒத்துழைப்பின் முன்னேற்றம் குறித்து விவாதிக்கப்பட்டதாக திரு ஜெய்சங்கர் தமது சமூக வலைளதப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஒத்துழைப்பின் எதிர்கால வளர்ச்சிக்கு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபரின் வழிகாட்டுதல் பயனுள்ளதாக இருக்கும் என்றும், அவர் கூறியுள்ளார்.

இந்த சந்திப்பின்போது பிரதமர் திரு நரேந்திரமோடியின் வாழ்த்துக்களை அதிபரிடம் தெரிவித்ததாகவும் திரு ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

உத்திரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவின் முக்கிய நாளான மவுனி அமாவாசை தினத்தையொட்டி இன்று லட்சக்கணக்கானோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர்.

13 அக்காராக்களில் ஒருவரான மகா நிர்வாணி பஞ்சாயத்தி அக்காரா முதலில் நீராட, அவரைத் தொடர்ந்து யாத்ரிகர்கள் புனித நீராடுகின்றனர்.

இந்த நிகழ்ச்சியின்போது கூட்ட நெரிசலை தவிர்க்கும் விதமாக இன்று பிரயாக்ராஜ் முழுவதும் வாகன போக்குவரத்து மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கூட்ட நெரிசலை ஒழுங்குபடுத்தி கண்காணிக்க பிரயாக்ராஜில் ஏழு அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அவசரகால உதவியாக ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்பு மருத்துவ முகாம்கள் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் மருத்துவர்கள் கூடுதலாக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மவுனி அமாவாசையையொட்டி பயணிகளின் வசதிக்காக கூடுதலாக 60 சிறப்பு ரயில்களை இயக்க ரயில்வே முடிவு செய்துள்ளது.

பிரயாக்ராஜ் ரயில் நிலையத்திலிருந்து நான்கு நிமிட இடைவெளியில் ரயில்கள் இயக்கப்படும் என்றும், இதற்காக விரிவான எற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ரயில்வே தெரிவித்துள்ளது.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

**[]<<<>>>[]**

ஹரியானா மாநிலம் குருஷேத்ரா மாவட்டத்திற்கு உட்பட்ட பெஹோவாவில் உள்ள சரஸ்வதி தீர்த்தத்தில் சர்வதேச சரஸ்வதி மகோத்சவம் இன்று தொடங்குகிறது.

ஏழு நாட்கள் நடைபெறவுள்ள இந்த விழாவை அம்மாநில முதலமைச்சர் திரு நயப்சிங் சைனி தொடங்கி வைக்கவுள்ளார்.

இந்த விழாவையொட்டி அடுத்த மாதம் இரண்டாம் தேதி வரை பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் நான்காம் தேதி சரஸ் மேளா நடைபெறும் என விழாக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இது தவிர ஆதிபத்ரி முதல் கட்ச் வளைகுடா வரை சரஸ்வதி ஆற்றின் கரையோரப் பகுதிகளில் வரலாற்று சிறப்புகளை எடுத்துரைக்கும் நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**[]<<<>>>[]**

நாட்டில் உள்ள எஃகு ஆலைகளை நவீனப்படுத்தி விரிவுபடுத்த இந்திய எஃகு ஆணையம் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மத்திய எஃகு துறை அமைச்சர் திரு குமாரசாமி தெரிவித்துள்ளார்.

ஜார்க்கண்ட் மாநிலம் பொக்காரோ-வில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொக்காரோ எஃகு ஆலை 74 லட்சம் டன் உற்பத்தி செய்யும் அளவிற்கு விரிவுபடுத்தப்பட்டு வருவதாகக் கூறினார்.

2030-ஆம் ஆண்டு இறுதிக்குள் நாட்டில் 300 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சுரங்கப் பகுதிகளில் ஆறாயிரம் கோடி ரூபாய்க்கும் கூடுதலான முதலீடு மேற்கொள்ளப்படுவதாகவும், பசுமை எதிர்காலத்தை உருவாக்கும் விதமாக நீடித்த திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும் திரு குமாரசாமி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மும்பை சத்திரபதி சிவாஜி விமான நிலையத்தில் மத்திய வருவாய் புலனாய்வுத் துறையினர் நடத்திய சோதனையில் 21 கோடியே 97 லட்சம் ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.,

இது தொடர்பாக உகாண்டா நாட்டைச் சேர்ந்த மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் நடத்திய சோதனையில் இரண்டாயிரத்து 197 கிராம் எடையுள்ள கொக்கேன் போதைப்பொருளை 170 கேப்சூல்களில் அடைத்து கடத்தி வந்தது கண்டறியப்பட்டுள்ளதாக வருவாய் புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

[]<<<>>>[]

ஹாக்கி இந்தியா லீக் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் கொணாசிகா அணி — ஹைதராபாத் அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

ஸ்ரீநகர்கேலாவில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் சூர்மா அணி — பெங்கால் அணியையும், உத்திரபிரதேச அணி — தமிழ்நாடு அணியையும் எதிர்கொள்கின்றன.

[]<<<>>>[]

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டுவெண்டி — டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 26 ரன் விதத்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ராஜ்கோட்டில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய இங்கிலாந்து அணி ஒன்பது விக்கெட் இழப்புக்கு 171 ரன் எடுத்தது.

172 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி ஒன்பது விக்கெட் இழப்புக்கு 145 ரன் மட்டுமே எடுத்தது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இந்திய அணி இரண்டு — ஒன்று என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இரு அணிகளுக்கும் இடையேயான நான்காவது போட்டி புனேயில் நாளை மறுநாள் நடைபெறவுள்ளது.

[]<<<>>>[]

நாகாலாந்து சூப்பர் லீக் கால்பந்து போட்டிகள் திம்மாப்பூர் மாவட்டம் **Chumoukedima** -வில் நேற்று தொடங்கியது.

இந்த தொடரில் 45 போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

***End of News***